1972 ஏப்ரல் 1]

அவை இருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட பெரியவர்களின் பெயர்களை வைக்கும்போது நல்ல இடங்களாகப் பார்த்து வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எந்தக் குற்றமும் நடைபெறாத இடத்தில் அவர்கள் பெயர்கள் இருக்க வேண்டுமென்று தேடிப் பிடித்து வைப்பது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. ஆகவே, அந்தப் பெயர்களைத் தூய்மைப்படுத்துகிற அளவிற்கு அப்படிப்பட்ட குற்றங்களை அந்தந்த இடங்களிலிருந்து அகற்றும் முயற்சியில் ஈடுபடலாமே தவிர பெயர்களை மாற்றும் முயற்சியில் ஈடுபடுவது வெற்றி பெறாது.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகள்

***819 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் அண்மையில் நகராட்சியாக மாற்றப்படவிருக்கும் பேரூராட்சி மன்றங்கள் எவையேனும் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சீர்காழி பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சியிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும், அந்தப் பேரூராட்சியை டவுன்ஷிப்பாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வந்துள்ளதா ? ஆமெனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய செயற்குறிப்பு ஒன்றும் அரசுக்கு வந்து சேரவில்லை.

வந்தவாசி—சேதாரகுப்பம் சாலையில் பாலம்

*** 820. வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வந்தவாசி ஒன்றியத்தில், வந்தவாசி சேதாரகுப்பம் சாலை, மைல் 1/1 என்ற இடத்தில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.